# ஹிந்தி எதிர்ப்புப் பொதுக்கூட்டம்.

## பாரதியாரின் வீரமுழக்கம்.

—)●(—

## ஏன் முஸ்லீகள் விலக்கப்படவேண்டும்?

### மக்களது விருப்பத்துக்கு மாறாக நடப்பதா ஜனநாயகத்துவம்?

சென்னை, அக். 5

கோகலே மண்டபத்தில் தமிழ் பாதுகாப்புச் சங்கத்தாரால் நேற்று ஒரு பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. அதற்கு ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள் தலைமை வகித்தார்.

தலைவர் பேசுகையில் தமிழ் நாட்டிலே முதல் மூன்று பாரங்களில் ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக்குவதால் தமிழ் கலையும் தமிழ் மொழியும் தமிழர் சமூகமும் அழிக்கப்படும் என்றும், ஹிந்தி 400 வருடங்களுக்குமுன் தோன்றிய மொழியானதினால் அதில் கலை வளர்ச்சிக்கான நூற்கள் இல்லை யென்றும், மந்திரிகளின் திட்டத்தை தமிழர்கள் கண்டிப்பாக எதிர்த்தே தீரவேண்டும் என்றும் வற்புறுத்திப் பேசினார்.

மேலும் பேசுகையில், வட நாட்டிலே பஞ்சாபி, பங்காளி முதலிய மொழிகள் பேசி வருகிற மக்கள் ஹிந்தியை பொதுமொழியாக கட்டாய பாடமாக்க துணியாதிருக்கையில் தமிழ் நாட்டில் மட்டும் கட்டாயப்படுத்துவதில் ஏதாவது அர்த்தமிருக்க முடியுமா? என்று கேட்டார்.

மாஜி மந்திரி ஆதரவு.

ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குவதை இப்பொதுக்கூட்டம் எதிர்க்கிறது என்ற தீர்மானத்தை மாஜி மந்திரி தோழர் எஸ். முத்தையா முதலியார் பிரேரேபித்தார்.

இவர் பேசுகையில் ஹிந்தியை கட்டாயப் பாடமாக்குவதற்கு சொல்லப்படுகிற காரணங்களை எடுத்து விளக்கி ஒன்றாவது ஊற்றுக்கு நிற்காதவைகள் என்பதை விளக்கிக் கூறினார்.

பாரதியார்.

தீர்மானத்தை ஆதரித்து தோழர் எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள் பேசுகையில் ஏக அரசாட்சியின் கீழ் இந்தியா இருப்பதற்கு ஒரு பொது மொழியிருக்க வேண்டுமென்பது பொருந்தாக் கூற்றாகுமென்றும் உலக சரித்திர மறிந்த எவரும் இதை ஒப்புக் கொள்ளார் என்றும் முன்னாளில் தமிழ் மொழியே வழங்கி வந்த தமிழ் நாட்டில் ஒரே ஆட்சிதானிருந்து வந்ததா? என்றும் தமிழ் நாட்டிலே ஹிந்தி கட்டாயப் பாடமாக்கினால் எல்லோரும் கற்க வேண்டுமல்லவா? அப்படியானால் முஸ்லீம்களையும் ஹிந்தியைக் கற்க கட்டாயப் படுத்துவார்களா? என்றும் அவ்வாறு செய்யப்போவதில்லை என்று முன்னமேயே காங்கரஸ் காரர்கள் கூறி விட்டார்கள் என்றும் விளக்கிப் பேசினார்,

மேலும் அரசியல் வளர்ச்சிக்கு ஹிந்தி அவசியம் என்று சொல்லுகிற தோழர் ராஜகோபாலாச்சாரியார் எந்த மொழியைக் கொண்டு இன்று காங்காசிலும் சர்க்காரிலும் பதவி வகித்து வருகிறார் என்றும் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்க சட்டமியற்றப்படுமேயானால் அது சர்வாதிகாரத்துவமே யாகுமே யொழிய ஜன நாயகத்துவமாகாது என்றும் மக்களின் விருப்பத்திற்கு மாறாகச் செய்யும் எந்த சர்க்காரையும் எதிர்க்க வேண்டுமென்று சொல்லி வந்த கூட்டத்தாரே இன்று பதவி ஏற்றவுடன் அதற்கு மாறாக செய்து வரும் காரியத்தை எவ்வாறு பொறுத்துக் கொண்டிருக்க முடியும என்றும் விரிவாக எடுத்துக் காட்டி கடைசியாக தமிழர்கள்எல்லாம் மந்திரிகளின் தீர்மானத்தை எதிர்த்துப் போராட வேண்டுமென்றும் பேசினார். தீர்மானம் நிறைவேறிற்று.